

# காதல் எனப்படுவது யாதெனில்...

டாக்டர் என்.ராஜ்மோகன்

“அங்கங்க மானே தேனே பொன்மானே... இதெல்லாம் போட்டுக்கணும்” என்று ஒரு சினிமா பாடலில் வரும். அந்தப் பாடலை கேட்கும் போதெல்லாம் எனக்குள் பல சந்தேகங்கள் எழும். ‘மானே தேனே பொன்மானே’ போன்ற வர்ணிப்புகளெல்லாம் உண்மையிலேயே உணர்ந்து சொல்லப்படுகின்றனவா? அல்லது, இந்தப் பாடலில் வருவதுபோல், சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்றால், ‘கிடைக்கிற இடத்தில் போட்டு வை!’ என்ற நிலைதானா? ஒரு பெண்ணை ஒரு ஆண் வர்ணிப்பதன் நோக்கம்தான் என்ன? என்று அந்த சந்தேகப் பட்டியல் நீளும்.

‘யாரிடமிருந்தாவது இதற்கு விடை கிடைக்காதா’ என்று வெகுகாலமாகக் காத்திருந்த நான், சமீபத்தில் ஒரு கல்லூரி மாணவனைச் சந்தித்தேன். முதலில் சாதாரணமாகத்தான் பேச்சு தொடங்கியது. தான் ஒரு ‘வர்ணனை திலகம்’ என்று அவன் தன்னைத் தானே வர்ணித்துக்கொண்ட பிறகு ஆர்வமாகி விசாரித்தேன். தன் ‘வர்ணிப்புத் திறமையை’ப் பற்றி அவனுக்குள் அப்படி பெருமிதம்.

‘எப்படிப்பட்ட பொண்ணா இருந்தாலும் சரி சார்! நாலு வரி புகழ்ந்து பேசினா போதும். நம்பளையே சுத்தி சுத்தி வருவாங்க’ என்று ஒட்டு மொத்த பெண் வர்க்கத்துக்கே அவன் இலக்கணம் வகுத்ததைக் கேட்டு எனக்கு சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை.

‘நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க’

‘இந்த டிரஸ் உங்களுக்கு ரொம்ப அழகா இருக்கு’

‘உங்க குரல் இருக்கே.. ஸ்வீட்டோ ஸ்வீட்!’ - இப்படி ஏகப்பட்ட ரெடிமேட் வாசகங்களை அவன் எப்போதும் தயாராக வைத்திருப்பானாம். அதுதான் பெண்களை ‘வீழ்த்த’ (இந்த வார்த்தையைக் கூட கூச்ச நாச்சமே இல்லாமல் அவன்தான் பயன்படுத்தினான்) அவன் உபயோகிக்கும் கணைகள்.

ஒரே வர்ணனைப் பட்டியலை எல்லா பெண்களிடமும் வாசிப்பது, எப்படியாவது அவர்களைக் கவர்ந்துவிட வேண்டும் என்று நினைப்பது, போஜனம் என்ன.. ஒரு பொரி உருண்டைகூட கிடைக்காத அளவுக்குத் தீவிரமான பொய்களையெல்லாம் அள்ளி விடுவது எல்லாமே சரி.. ஆனால், இதையெல்லாம் அவன் எதற்காக செய்கிறான்?

“சும்மா.. ஒரு விளையாட்டுக்குத்தான் சார்! நம்ம பின்னாடி போட்டி போட்டுக்கிட்டு பொண்ணுங்க சுத்துறாங்கன்னா, அது ஒரு கவுரவம்தானே! ‘நான் உன்னைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்’னு பொண்ணுங்க சீரியஸா நம்மகிட்ட வந்து சொல்லும் போது, எதையோ சாதிச்சிட்ட மாதிரி ஒரு ஃபீலிங் வரும்” என்ற அவனைப் பார்த்து எனக்கு சிரிப்புதான் வந்தது. இப்படியும் ஒரு மனநோயாளியா என்று!



‘இப்படியும் ஆண்கள் இருப்பார்களா என்று இதைப் படிக்கும் பெண்களுக்கு வேண்டுமானால் ஆச்சர்யமாக இருக்கலாம். ஆனால், இப்படிப்பட்ட ஆண்களின் சத விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது என்பது உண்மைதான். (அடுத்த முறை உங்களை நோக்கி இதே போன்ற ஒரு கணை வரும்போது இந்தப் பையனை நினைவில் கொள்ளுங்கள்).



இந்தப் பையனைப் போலவே நான் படித்த காலத்தில் எனக்கொரு நண்பர் உண்டு. உலகில் இருக்கும் அடிப்படையான நிறங்களைப் பற்றி மட்டும் அவர் ஆதி முதல் அந்தம் வரை தெரிந்து வைத்துக் கொண்டிருப்பார். கூடப் படிக்கிற பெண்கள் எந்த நிறத்தில் உடையணிந்து வந்தாலும், அந்த நிறத்தின் சிறப்பைப் பற்றி ஒரு பக்கத்தில் வசனம் பேச அவரால் முடியும். ‘நம்மைப் புகழ்கிறார்’ என்ற மகிழ்ச்சி.. ‘இத்தனை விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறாரே’ என்ற ஆச்சர்யம்.. இந்த இரண்டையும் பெண்கள் மனதில் உருவாக்குவதுதான் அவரின் ஒரே லட்சியம். அதில், பல நேரங்களில் அவர் வெற்றியும் பெற்றிருக்கிறார்.

நான் சந்தித்த அந்தப் பையனும் சரி.. என் நண்பரும் சரி.. ஒரே மாதிரியானவர்கள்தான். இவர்களைப் பற்றி நாம் கவலையோ, கோபமோ அடையவேண்டிய அவசியம் இல்லை. என்னுடைய கவலையெல்லாம் தெரிந்தோ தெரியாமலோ, இவர்களுடைய வர்ணனைக்கு மயங்கிய.. மயங்குகிற.. மயங்கப் போகிற.. அப்பாவி பெண்களைப் பற்றித்தான்.

பெண்கள் ‘எல்லோருமே’ வர்ணனைக்கு மயங்குகிறவர்கள் என்று ஒரு சிலர் இப்படி மெத்தனமாகப் பேசிக் கொண்டு திரிவதற்குக் காரணம் இருக்கிறது. தங்கள் அறியாமையாலும் எதையும் எளிதாக நம்பிவிடும் வெகுளித்தனத்தாலும் இன்றுவரை இப்படிப்பட்ட ஆண்களின் வலையில் சிக்கிக் கொள்ளும் பெண்களும் இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

ஆனால், எவனோ ஒருவன், தேவையில்லாமல் நம்மிடம் வர்ணனைகளை வார்க்கிறான்.. பொய் பொய்யாகப் பொழிகிறான் என்றால், ‘அவன் நோக்கம் என்னவாக இருக்கும்..’ என்பதை பெண்கள் சிந்திக்க வேண்டும்.

உங்களை கல்யாணம் செய்ய விரும்புகிறவன் என்றால், அவன் ‘தான் ஒரு கௌரவமான மனிதன்’ என்பதை உங்களிடம் வலியுறுத்த விரும்ப மாட்டானா? உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கூசும் அளவுக்கா வர்ணிப்பான்? அதற்காக, உங்களைச் சுற்றி இருக்கும் அப்படிப்பட்ட வர்ணனை பார்ட்டிகளை ஒவ்வொரு முறையும் கன்னத்தில் அடித்து அவமானப்படுத்தத் தேவையில்லை. பொய் என்று தெரிந்தாலும் நம்மைப் பற்றி உயர்வாக ஒருவர் பேசும்போது, ஒருவித உற்சாகம் மனதில் பிறக்கத்தான் செய்யும். ஒரு சின்னப் புன்னகை, ஒரு ‘தேங்க்யூ’ போன்றவற்றால் அவர்களை சமாளித்து, கடந்தும் விடலாம்.

அதை விட்டுவிட்டு, போயும்போயும் ஒரு வெற்றுப் புகழ்ச்சிக்காக வாழ்க்கையையே ஒருவனிடம் ஒப்படைக்கும் அளவுக்குப் போவதில், எந்த வித லாஜிக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. என்ன செய்ய.. சில சமயம் லாஜிக்கே இல்லாத விஷயங்கள் தானே உலகில் அதிகமாக நடக்கின்றன!

ஒரு பெண், ஒரு அந்நிய ஆணிடம், ‘நீ மன்மதன் மாதிரி இருக்கிற.. உன்னோட கண்ணு ரொம்ப அழகு..’ என்றெல்லாம் வர்ணித்து, அவனை மகிழ்ச்சிப் படுத்துவது இல்லை! ‘தனக்கானவனிடம் மட்டுமே அப்படி நடந்து கொள்ளவேண்டும்’ என்று தனக்குள்ளாகவே ஒரு ஒழுக்கத்தை வகுத்துக் கொள்வதுதானே அதற்குக் காரணம். அந்த ஒழுக்கம் ஆணிடமும் இருக்க வேண்டாமா? அந்நியப் பெண்களை வர்ணிக்கும் ஆண்களையெல்லாம் அந்த ஒழுக்கத்தை மீறியவர்களாகக் கருதிக் கொள்வதில் ஒன்றும் தவறில்லை என்பது என் எண்ணம்.

உங்களை நோக்கி வீசப்படுவது தூண்டிலா, தூய அன்பா என்பதைத் துப்பறிந்து தப்பித்துக் கொள்வது தான் இந்த வயதில் உங்கள் முன்னால் வைக்கப் பட்டிருக்கும் சவால்!

- ஆராய்வோம்...